இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 22-11-2024

# காற்று மாசு - தூசு கவனம்

தலைநகர் டெல்லியில் காற்று மாசுபாட்டின் அளவு 488 புள்ளிகளாக பதிவாகி இருக்கிறது. இதனை 'மிகத் தீவிரம் ப்ளஸ்' என்று சொல்கிறார்கள். இது மிகமிக அபாயகரமானது ஆகும்.

காற்றின் தரக்குறியீடு என்பது 201-300 என்ற அளவில் இருந்தால் மோசம் என்றும் - 301-400 என்ற அளவில் இருந்தால் மிக மோசம் என்றும் - 401-450 என்ற அளவில் இருந்தால் மிகத் தீவிரம் என்றும் - 450க்கு மேல் இருந்தால் மிகத் தீவிரம் ப்ளஸ் - என்றும் கணிக்கப்படுகிறது. 'மிகத் தீவிரம் ப்ளஸ்' என்றால் - சுவாசிக்க முடியாத, சுவாசிக்கக் கூடாத காற்று என்று பொருள். தலைநகர் எந்தளவுக்கு மோசமான சூழலில் சிக்கி உள்ளது என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

காற்றின் தரக் குறியீடு கடந்த 17 ஆம் தேதியன்று 494 புள்ளிகளை எட்டியது. இது கடந்த ஆறு ஆண்டுகளில் இரண்டாவது முறையாகப் பதிவான மிக மோசமான அளவு ஆகும். இது 19 ஆம் தேதியன்று 488 புள்ளிகளாக இருந்தது. இதுவும் மிக மோசமான அளவே ஆகும்.

உலக அளவில் காற்று மாசு மோசமாக இருக்கும் நகரமாக பாகிஸ்தானின் லாகூருக்கு அடுத்தபடியாக இந்தியாவின் தலைநகர் டெல்லி இருக்கிறது. லாகூரில் காற்றின் தரக்குறியீடு 1000 புள்ளிகளாகப் பதிவாகி இருக்கிறது. அதில் பாதியளவுக்கு மாசடைந்துள்ளது டெல்லி.

இயற்கை நிலையைத் தடுப்பதாக காற்று மாசு அமைந்துவிட்டது. மேகங்களில் படர்ந்த தூசி மற்றும் புகையானது குளிர் காற்றையும், குறைந்த வானிலையையும் உணரமுடியாத அளவுக்குத் தொல்லையை டெல்லி மக்களுக்குக் கொடுத்து வருகிறது. இதற்குக் காரணம், அடர் பனிப்புகை மூட்டமானது சாம்பல் மேகம் போலக் காட்சியளிப்பது ஆகும். எதிரில் இருப்பது தெரியாத அளவுக்குப் புகை மண்டலமாகக் காட்சி அளிக்கிறது. விமான நிலையங்களில் ஓடுதளப் பாதையே தெரியவில்லை. இதனால் பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. டெல்லியை நோக்கி வந்த விமானங்கள் வேறு நிலையங்களுக்கு மாற்றப்பட்டது.

**10.12 ஆம் வகுப்பு தவிர மற்ற வகுப்புகள் அனைத்தும் ஆன்லைன் மூலமாக நடத்தப்படுகின்றன. இந்த மாணவர்கள் பள்ளிகளுக்கு வரத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. சாலைகள், பாலங்கள் மூடப்பட்டுள்ளன. அரசு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளது. அவசிய, அவசரப் பொருள்களை ஏற்றி வரும் லாரிகள் தவிர மற்றவை எதுவும் டெல்லிக்குள் வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பசுமை எரிபொருளால் இயங்கும் வாகனங்கள் தவிர மற்றவை டெல்லிக்குள் வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிமாநிலப் பதிவெண் வாகனங்கள் தடை செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான அலுவலகங்கள் இயங்கவில்லை. நீதிமன்ற விசாரணைகள் ஆன்லைனில் நடக்கின்றன. மொத்தத்தில் டெல்லியே மூடிக்கிடக்கிறது.**

இதுபோன்ற சூழலில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை டெல்லி அரசு முடுக்கி விட்டுள்ளது. இப்போது எடுக்கப்பட்டு இருப்பது நான்காம் நிலைக் கட்டுப்பாடு ஆகும். இதனை முன்கூட்டியே எடுத்திருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. "காற்றின் தரம் டெல்லியில் தொடர்ந்து மோசமாக இருந்துள்ளது. காற்றுத் தரக் குறியீடு 450 என்ற நிலையை எட்டும் வரை நான்காவது கட்டுப்பாடு நடவடிக்கைகளை ஏன் செய்யவில்லை?" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேட்டுள்ளார்கள். "இந்த நடவடிக்கைகளை எங்கள் அனுமதி இல்லாமல் இனி எடுக்கக் கூடாது" என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளார்கள்.

காற்றில் இருக்கும் நுண் துகள்களைக் கொண்டே காற்றின் தரம் கணக்கிடப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகள், தென் கிழக்கு ஆசிய நாடுகள், மேற்கு பசிபிக் நாடுகள் - அதிக மாசு அடைந்த நாடுகளாக உலக சுகாதார அமைப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**காற்று மாசுபாடு என்பது உலகளாவிய சவாலாக இன்று மாறி வருகிறது. காற்று மாசுபாட்டின் அளவானது நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. வாகனங்கள் வெளியிடும் புகையால் அதிகளவு காற்று மாசு அடைகிறது. தொழிற்சாலை புகைகளும் இதில் சேர்கிறது. நுரையீரல் புற்றுநோய், ஆஸ்துமா ஆகிய நோய்கள் இதன் மூலம் அதிகம் ஆகி வருகிறது. அனைத்துவிதமான மாசுகள், அதிகப்படியான உயிரிழப்புகளுக்கு காரணமாகி வருகின்றன. எனவே இதில் கவனம் செலுத்த வேண்டியது அவசர அவசியம் ஆகும்.**

**ஒன்றிய சுகாதாரத் துறைச் சேவைகள் இயக்குநர் வெளியிட்ட அறிக்கையில், 'காற்று மாசுபாடு சமீபகாலமாக ஒரு தீவிரமான சுகாதார சவாலாக மாறியுள்ளது' என்று எச்சரித்துள்ளார்.**

**"கடும் மாசுபாட்டு சுவாசம் என்பது இருதயம் மற்றும் பெருமூளை அமைப்புகளை பாதிக்கக்கூடும். காற்று மாசுபாட்டின் நீண்ட கால வெளிப்பாடு என்பது பெரும்பாலும் முன்கூட்டிய இறப்பை அதிகரிக்க வழிவகுக்கிறது. குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், போக்குவரத்துப் போலீஸ் அதிகாரிகள் மற்றும் நகராட்சி ஊழியர்கள் போன்றவர்கள் அதிக பாதிப்பு அபாயங்களை எதிர்கொள்கின்றனர். எனவே அரசும், பொதுமக்களும் கவனத்துடன் இருக்க வேண்டும்.**

காலநிலை மாற்றம் தொடர்பான தேசியத் திட்டத்தின் கீழ் காற்று மாசுபாடு தொடர்பான நோய்களுக்கான கண்காணிப்பு அமைப்புகள் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும். விழிப்புணர்வு மூலம் குப்பைகள் மற்றும் கழிவுகளை எரிப்பதை ஊக்கப்படுத்துதல், பண்டிகைகளின்போது பட்டாசுகள் வெடிப்பதை குறைத்தல், தனிநபர் டீசல் அல்லது பெட்ரோலில் இயங்கும் வாகனங்களில் பொது போக்குவரத்தை ஊக்குவித்தல், டீசல் அடிப்படையிலான ஜெனரேட்டர்களை நம்பியிருப்பதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் புகைபிடிப்பதை கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அதிக நெரிசலான பகுதிகளைத் தவிர்த்தல் மற்றும் வீட்டில் சமையல், சூடு மற்றும் விளக்குகளுக்கு சுத்தமான எரிபொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வயதானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்ற பாதிக்கப் படக்கூடிய மக்கள் மற்றும் சுவாசம் மற்றும் இருதய நோய்கள் போன்ற பிரச்சினைகள் ஏற்கெனவே உள்ளவர்கள் மோசமான அறிகுறிகளை அல்லது மோசமான காற்றின் தரம் காரணமாக அசௌகரியத்தை அனுபவிப்பவர்கள் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்" என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**காற்றைச் சுத்தப்படுத்துவது கடினம். மாசுபடுத்தாமல் இருத்தல் எளிது. மாசுபடுத்தாமல் இருப்போம்.** ••

பள்ளி ஆசிரியை கொலை மிருகத்தனமானது!

# உயிரிழந்த ஆசிரியையின் குடும்பத்திற்கு ரூ. 5 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.22– **தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே பள்ளி ஆசிரியை கொலை மிருகத்தனமானது என்றும், உயிரிழந்த ஆசிரியையின் குடும்பத்திற்கு ரூ. 5 லட்சம் நிதி வழங்கப்படும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்காலிக பட்டதாரி தமிழ் ஆசிரியையாகப் பணிபுரிந்துவந்த செல்வி ரமணி (வயது 26) த/பெ.முத்து அவர்கள் 20.11.2024 அன்று காலை பள்ளி வளாகத்தில் இருந்த போது மதன்குமார் என்ற நபரால் கத்தியால் குத்தப்பட்டு பலத்த காயமடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியைக்கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் உடனடியாக உயர்கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்களை உயிரிழந்த ஆசிரியை அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்க அனுப்பி வைத்தேன்.

பள்ளி ஆசிரியை கொலை செய்யப்பட்டுள்ள இச்சம்பவமானது மிகவும் மிருகத்தனமானது, இச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்கு பதியப்பட்டுள்ளது. இவ்வழக்கின் விசாரணை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு குற்றவாளிக்கு விரைவில் சட்டப்படி தண்டனை பெற்றுத்தரப்படும்.

கிராமப்புறப் பகுதியில் கல்விப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட செல்வி ரமணி அவர்களின் உயிரிழப்பு பள்ளிக் கல்வித் துறைக்கும், சக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

செல்வி ரமணி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள், சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, செல்வி ரமணி அவர்களின் குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கடற்படையினர் சிறை பிடித்துள்ள தமிழ்நாட்டு மீனவர்கள் 7 பேர் உட்பட

# 14 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

புதுடெல்லி, நவ. 22 - **பாகிஸ்தான் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 மீனவர்களை உள்ளடக்கிய 14 இந்திய மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 மீனவர்களுடன் சேர்ந்து 14 இந்திய மீனவர்கள் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற போது 03.01.2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.11.2024 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், 14 இந்திய மீனவர்கள் (7 மீனவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்) குஜராத்தின் போர்பந்தரில் இருந்து INDGJ25MM3458 மற்றும் INDGJ25MM1582 என்ற பதிவெண்கள் கொண்ட இயந்திரப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்றபோது 03.01.2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு ஏறக்குறைய 10 மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மீனவர்களின் தற்போதைய நிலை குறித்தோ, அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் குறித்தோ எவ்வித் தகவலும் இல்லை என முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும், மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக நீண்டகாலமாக நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என்றும் பொருளீட்டும் மீனவர்கள் இல்லாததால் அவர்களைச் சார்ந்துள்ள குடும்ப உறுப்பினர்கள் மிகுந்த மனவேதனையுடன் உள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் கடற்படையினரால் நீண்டகாலமாக சிறையிலடைக்கப்பட்டுள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் விடுவிக்க உறுதியான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற சைக்கிளிங் வீராங்கனைகள்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, நவ.22– **துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிளிங் கூட்டமைப்பு ஒன்றிணைந்து நடத்திய 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சைக்கிளிங் வீராங்கனைகள் நேற்று முன்தினம் (20.11.2024) சந்தித்து பாராட்டும், வாழ்த்தும் பெற்றனர்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிளிங் ஓடுதளத்தில், 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்தார்.

இப்போட்டி ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் யூத் (Youth): 12 14 வயதுக்கு உட்பட்டோர், சப் ஜூனியர் (SubJunior): 15 16 வயதுக்கு உட்பட்டோர், ஜூனியர் (Junior): 17 18 வயதுக்கு உட்பட்டோர், எலைட் (Elite): 19 வயது மேற்பட்டவர் என நான்கு உட்பிரிவுகளை கொண்டு நடத்தப்பட்டது. இப்போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 வீரர், வீராங்கனைகள் உள்பட, 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 700 க்கும் மேற்பட்ட சைக்கிள் பந்தய வீரர்கள் பங்கேற்றனர்.

76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்ற சைக்கிள் பந்தய ஓடுதளம், SDAT யால் ரூ.1 கோடியில் புதுப்பிக்கப்பட்ட சைக்கிள் ஓட்டுதல் Velodrome ஆகும். இது தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்தும் வசதி கொண்ட சைக்கிள் பந்தய ஓடுதளமாகும். 333.333 மீட்டர்கள் கொண்ட இந்த சைக்கிளிங் டிராக், மிக முன்னோடியான, உலகத் தரம் வாய்ந்த (ஓட்டுதல் தடங்களில்) ஒன்றாகும்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம், தகுதியான 11 சைக்கிளிங் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சுமார் ரூ.1 கோடியே 67 லட்சம் உயர்தர அதிநவீன பந்தய சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் இந்த போட்டியில் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொண்டு வெற்றிகளை பெற்றனர்.

76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சைக்கிள் பந்தய வீராங்கனைகள் செல்வி. ஹாசினி, செல்வி.ஜெய் ஜோஷ்னா, செல்வி.தபிதா ஆகியோர் கொண்ட குழுவினர் டீம் ஸ்பிரிண்ட் (TEAM SPRINT) போட்டியில் சப் ஜூனியர் பிரிவில் தங்கம் வென்றனர்.

500 மீட்டர் தனிநபர்களுக்கான (INDIVIDUAL) சப் ஜூனியர் பிரிவில் டைம் ட்ரையல் (TIME TRIAL) போட்டியில் செல்வி.தபிதா தங்கப்பதக்கத்தையும், செல்வி.ஜெய் ஜோஷ்னா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

17 - 18 வயதுடைய ஜூனியர் பிரிவில் 3,000 மீட்டர் பந்தய தூரம் கொண்ட டீம் பெர்ஷூட் (TEAM PURSUIT) போட்டியில் செல்வி.தன்யதா, செல்வி.கார்த்தியாயினி, செல்வி.நிறைமதி, செல்வி. பூஜா ஸ்வேதா ஆகியோர் கொண்ட குழுவினர் தங்கப் பதக்கம் வென்றனர்.

17 - 18 வயதுடைய ஜூனியர் பிரிவில் டீம் ஸ்பிரிண்ட் (TEAM SPRINT) போட்டியில் செல்வி.தன்யதா, செல்வி.நிறைமதி, செல்வி.பூஜா ஸ்வேதா ஆகியோர் கொண்ட குழுவினர் தங்கப்பதக்கம் வென்றனர்.

மேலும் தனிநபர் போட்டிகளான ஸ்க்ராச் பந்தய (SCRATCH RACE) மற்றும் இண்டிவிஜுவல் பெர்ஷூட் (INDIVIDUAL PURSUIT) போட்டிகளில் செல்வி.தன்யதா வெள்ளிப்பதக்கம் வென்றார். தனிநபர் போட்டியான கெய்ரின் (KEIRIN) சைக்கிளிங் செல்வி.பூஜா ஸ்வேதா வெள்ளிப்பதக்கத்தையும் வென்றார். 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் ஜூனியர் பிரிவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை பிடித்தது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தகப்பன் சாமி!



அன்று -
"அப்பா" என்று அழைக்கவா என்று -
நீ கேட்டபோது -
தமிழ்நாடே உனக்காக அழுதது!

இன்று -
ஆதரவற்ற -
ஆண்டவனின் பிள்ளைகள் -
"அப்பா" என்று அழைக்கும்
பேறு பெற்றாய்!
தமிழ்நாடே போற்றும்
"தகப்பன் சாமி" ஆனாய்!
வாழ்க நீ தலைவா!
நீடூழி வாழ்க!

-அ.இளங்கோவன்
சென்னை-60